| 27.06.2024 | 253 | பொருள் 32 ஜெயங்கொண்டம் நகராட்சி மூலம் அலுவலக பணி தொடர்பாக கணிணி இயக்குபவர், கனரக வாகனம் இயக்குபவர், இலகுரக வாகனம் இயக்குபவர், மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர், அலுவலக உதவியாளர், காவலாளர், மற்றும் உரக்கிடங்கு தேவையான பணிக்கு 24.01.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு துரை அன் கோ என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு ஆணை ( ந.க.எண். 4318/2023/இ1 நாள் 09.02.2023) வழங்கப்பட்டு உத்தரவுகளின் படி 01.03.2024 முதல் 31.05.2024 வரை மூன்று மாதங்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டும், மேலும், உள்ளாட்சி அமைப்பு விதிகள் 235 ன்படி அட்டவணை II ல் 'G' யின் படி ஆணையரால் 01.06.2024 முதல் 30.06.2024 வரை ஒரு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒப்பந்த காலம் 30.06.2024 அன்றுடன் முடியும் நிலையில் உள்ளது. மேலும், தற்போது கோடை காலம் என்பதாலும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்க வேண்டியுள்ளதாலும், அந்தந்த பகுதிகளில் வரி வசூல் பணிகள் மேற்கொள்ளவும் பொது மக்களுக்கு நலம் சார்ந்த பணிகள் மேற்கொள்ளவும், மேலும் உயர் அதிகாரிகள் கூறும் புள்ளி விவரங்களை உடனுக்குடன் பதிவேற்றம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் எதிர்வரும் 01.07.2024 முதல் 31.08.2024 வரை பிரதி ஞாயிறு உட்பட இரண்டு மாத காலத்திற்கு பணிகளை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதங்களின் படி கால நீட்டிப்பு செய்யும் இப்பணிக்காலத்திற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 4318/2023/இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 27.06.2024 | 254 | பொருள் **33** ஜெயங்கொண்டம் நகராட்சியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடையை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு **இந்நகராட்சி மன்ற தீர்மான எண்.346 நாள்.31.05.2021 ன்படி** நகராட்சி நிர்வாகமே தற்காலிகமான ஒப்பந்த அடிப்படையில் அனுபவம் உள்ள மூன்று பணியாளர்களை கொண்டு திரு.மு.சேகர், ஒப்பந்ததாரர் அவர்கள் மூலம் **01.05.2021** முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **31.03.2024** ல் அவர்கள் ஒப்பந்த காலம் முடிவடையும் தருவாயில் உள்ளது. இதனை தொடர்ந்து நவீன எரிவாயு தகன மேடை நகராட்சி நிர்வாகம் மூலம் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது **2024** லோக்சபா தேர்தல் தேதி அறிவிப்பு வெளியாகும் நிலையில் உள்ளதால், டெண்டர் கோர போதுமான கால அவகாசம் இல்லை. எனவே, தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.மு.சேகர் என்பவர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மூன்று பணியாளர்களை கொண்டு **01.04.2024** | மன்றம் ஏற்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | முதல் **30.06.2024** வரை மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில் கால நீட்டிப்பு செய்து உள்ளதை ஏற்றும் தொடர்ந்து இப்பணி தேவை உள்ளதால் மேலும் **01.07.2024** முதல் **31.08.2024** வரை இரண்டு மாத காலத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில் கால நீட்டிப்பு செய்யவும், பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/– த்திற்கு பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்க கேட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 4780 / 2021 / எச்1** | |
| 27.06.2024 | 255 | **பொருள் 34** ஜெயங்கொண்டம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் செயல்பட்டு வரும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்கு கடந்த **24.01.2024** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு துரை அன் கோ, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்திற்கு ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4317/2023/எச்1 நாள்.09.02.2024 நாளிட்ட உத்தரவில் **01.03.2024** முதல் **31.05.2024** வரை மூன்று மாத காலங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும் பிரதி வார ஞாயிறு கிழமை தவிர மற்ற நாட்களில் பணியாளர்கள் வருகை தர வேண்டும் என உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் பொது மக்களுக்கு டெங்கு கொசு நோயினை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளுடன் அந்தந்த பகுதிகளில் வரி வசூல் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் பொது மக்களுக்கு தேவையான பொது சுகாதார தினசரி பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் **01.03.2024** முதல் **31.05.2024** வரை அனைத்து தினங்களிலும் (விடுமுறை மற்றும் ஞாயிறு கிழமை சேர்த்து) டெங்கு மஸ்தூர் பணி மேற்கொள்ளவும் இக்காலத்திற்கான ஒப்பந்த தொகையினை பொது நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று **01.03.2024** முதல் **31.05.2024** வரை செயல்படுத்தபட்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 4317 / 2023 / எச்1** | மன்றம் ஏற்கலாம் |
| 27.06.2024 | 256 | **பொருள்** 35 ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை ளுநசஎளைந ஞசடிஎனைநச / ஹபநேஉல / ஊடிவேசயஉவடிச மூலம் மூன்று ஆண்டுகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் செயல்முறை ஆணை எண்.35295/2022/நுஹ2–ளுறுஆ–17, நாள் 10.01.2023–ல் கீழ்க்காணும் விபரப்படி நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| சூயஅந டிக ஆரஷேஉ யையீடவை ல | ஞுரயபே வவைல டிக றுயளவ ந ஞுநேச | சுயவந யீநச கூடிநே ந (ஷை சுள) | நுளவை அயவந ன யெளந உடிளவ யீநச | நுளவை அயவந ன யெளந உடிளவ யீநச | ஹயீயீட ையடெ ந ழுளுகூ 18ரூ யனே | நுளவை அயவநன வடிவயட உடிளவ யீநச லநயச |
|---|---|---|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>

| | யவநன (கூஞுனு ) | | னயல (சுள .டை டயமா) | லநயச (சுள. டை டயமா) | டுறுகு 1ரூ (சுள. டை டயமா) | (சுள. டை டயமா) |
|---|---|---|---|---|---|---|
| துயலயமே டினேயஅ | 11.96 | 4,164.74 | 0.50 | 182.50 | 34.67 | 217.17 |

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும்நகராட்சி , நிதி பற்றாக்குறைஏற்படின் ) வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் 15 15வா ஊகுஊ ளுறுஆ கூநைன முசயவே) – யை பயன்படுத்திக் கொள்ளவும், மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று ஓர் ஆண்டிற்கு பணி உத்தரவு வழங்கி அந்நிறுவனத்தின் செயல்திறன் (ளுநசகடிசஅயஉந ளுயவளைகயஉவழைே) திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு மன்ற அனுமதியுடன் ஒப்பந்த காலத்தை நீடித்து வழங்கவும், கடந்த **30.05.2023** அன்று ஆ/ள மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணிக்கள் என்ற நிறுவனத்திற்கு **01.06.2023** முதல் **31.05.2024** வரை ஒரு வருட காலத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஒராண்டு முடிவுறும் நிலையிலும், மேற்கண்ட நிறுவனத்தின் பணியானது திருப்திகரமாக உள்ளதினால் அடுத்த இரண்டாம் ஆண்டுக்கு **(01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதங்களுக்கு மட்டும்)** ஒப்பந்த காலத்தை நீடித்து வழங்கவும், மேற்படி ஒப்பந்த கால செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும்நகராட்சி நிதி பற்றாக்குறை , வது மத்திய நிதிக்குழு மான்யத்தில 15 ஏற்படின் ) 15வா ஊகுஊ ளுறுஆ கூநைன முசயவே) – யை பயன்படுத்திக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் செயல்முறை ஆணை எண்.35295/2022/நுஹ2–ளுறுஆ–17, நாள் 10.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும் , நிபந்தனைகளின்படி செயல்படுத்திட மன்றம் .அனுமதிக்கலாம்

**<u>ந.க.எண். 0115/2023/எச்1</u>**

</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>257</td>
<td>பொருள் 36 ஜெயங்கொண்டம் நகராட்சி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்கு கடந்த 24.01.2024 அன்றைய ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு துரை அன் கோ என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு ஆணை (ந.க.எண்.4317/2023/எச்1 நாள் 09.02.2024 ) வழங்கப்பட்டு உத்தரவுகளின் படி 01.03.2024 முதல் 31.05.2024 வரை மூன்று மாதங்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எதிர் வரும் 31.05.2024 அன்றுடன் ஒப்பந்த காலம் முடியும் நிலையில் உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் 15.05.2024 அன்றைய ஆய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவதுறை சார்பில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் 20.05.2024 அன்றைய ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி அரியலூர் மாவட்டத்தில் அதிகப்படியான டெங்கு</td>
<td>மன்றம் ஏற்கலாம்</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | காய்ச்சல் பரவ வாய்ப்புள்ள காரணத்தினால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை சீரிய முறையில் மேற்கொள்ளவும் பொது மக்களிடையே டெங்கு காய்ச்சல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுருத்தப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் **01.06.2024** முதல் **30.06.2024** வரை பிரதி ஞாயிறு உட்பட ஒரு மாத காலத்திற்கு பணிகளை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதங்களின் படி கால நீட்டிப்பு செய்யும் தற்போது அமலில் உள்ள நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகளினால் நகர்மன்ற கூட்டத்தொடர் நடைபெற இயலாத நிலையில் இப்பணிகளை முன் அனுமதிபெற்று மேற்கொள்ளவும் இப்பணிக்காலத்திற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. உள்ளாட்சி அமைப்பு விதிகள் **235** ன்படி அட்டவணை ஐஐ ல் 'ழு' யின் படி ஆணையரால் ஒரு மாத காலத்திற்கு அனுமதித்து உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 4317/2023/எச்1** | |
| 27.06.2024 | 258 | **பொருள் 37** ஜெயங்கொண்டம் நகராட்சி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்கு கடந்த **24.01.2024** அன்றைய ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு துரை அன் கோ என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு ஆணை (ந.க.எண்.4317/2023/எச்1 நாள் 09.02.2024 ) வழங்கப்பட்டு உத்தரவுகளின் படி **01.03.2024** முதல் **31.05.2024** வரை மூன்று மாதங்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டும், மேலும், உள்ளாட்சி அமைப்பு விதிகள் **235** ன்படி அட்டவணை ஐஐ ல் 'ழு' யின் படி ஆணையரால் **01.06.2024** முதல் **30.06.2024** வரை ஒரு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒப்பந்த காலம் **30.06.2024** அன்றுடன் முடியும் நிலையில் உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் **15.05.2024** அன்றைய ஆய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவதுறை சார்பில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் **20.05.2024** அன்றைய ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி அரியலூர் மாவட்டத்தில் அதிகப்படியான டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்புள்ள காரணத்தினால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை சீரிய முறையில் மேற்கொள்ளவும் பொது மக்களிடையே டெங்கு காய்ச்சல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுருத்தப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் **01.07.2024** முதல் **31.08.2024** வரை பிரதி ஞாயிறு உட்பட இரண்டு மாத காலத்திற்கு பணிகளை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதங்களின் படி கால நீட்டிப்பு செய்யும் இப்பணிக்காலத்திற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 4317/2023/எச்1** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 27.06.2024 | 259 | **பொருள் 38** ஜெயங்கொண்டம் நகராட்சி செந்துறை ரோட்டில் ஆ<u>ஊஊ</u> வளாக பகுதியில் அமைந்துள்ள கசடு கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையத்தில் தனியார் வாகனம் மூலம் கொண்டு வரும் கழிவு நீரை சுத்தகரிக்க வாகனம் நடை ஒன்றுக்கு ரூ.**200.00** வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | மன்றம் பதிவு செய்யலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | <u>**அலுவலக குறிப்பு :–**</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><u>**ந.க.எண். 0330/2023/எச்1**</u> | |
| 27.06.2024 | 260 | பொருள் 39 ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் விற்க இயலாத பிளாஸ்டிக் அவ்வபோது சிமெண்ட் தொழிற்சாலைக்கு எரிப்பொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி பிளாஸ்டிக் கழிவுகளை நகராட்சி பகுதிகளிலிருந்து அப்புறபடுத்தப்பட்டு வருகிறது. மேலும், கடந்த காலங்களில் சேகரித்து வைக்கப்பட்டிந்த பிளாஸ்டிக் கழிவுகள் தோராயமாக சுமார் 100 மெட்ரிக் டன் அளவில் நகராட்சி வளம் மீட்பு மையத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளது. அதனையும் சேர்த்து அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு எரிப்பொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் பணிகளை தனியார் ஒப்பந்த வாகனம் மூலமாக தினசரி வாடகை அடிப்படையில் இப்பணியினை மேற்கொள்ளவும் அதற்குரிய தோராய செலவினமாக ரூ. 50,000/– யினை நகராட்சி பொது நிதியில் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :–**</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br><u>**ந.க.எண். / 2023 / எச்1**</u> | மன்றம் ஏற்கலாம் |
| 27.06.2024 | 261 | பொருள் 40 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வரும் 2024 – 25 ம் நிதியாண்டில் 21 வார்டுகளிலும் பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதாரப்பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் மற்றும் இதர கிருமி நாசினி பொருட்கள் வாங்ககி வழங்கிட தோரய செலவினம் ரூ.10,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :–**</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>**ந.க.எண். 1804/2024/எச்1**</u> | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 27.06.2024 | 262 | பொருள் 41 ஜெயங்கொண்டம் நகராட்சி 21 வார்டுகளில் வீடுகள் மற்றும் வணிக பகுதிகளில் தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் தொழிற்காலைக்கு அனுப்பும் பணிக்கு இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி காம்பாக்டர் வாகனத்தை பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட காம்பாக்டர் வாகனத்தில் ஹைட்ராலிக் பம்ப்பில் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி பழுதினை சரி செய்ய தோராய செலவினத்தொகை ரூ.30,000/– க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :–**</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>**ந.க.எண். 5471/2021/எச்1**</u> | மன்றம் ஏற்கலாம் |

பொருள் 42 தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் அத்தியாயம் IX–ன் விதி எண் 289–ன் படி நகராட்சிகளின் எல்லைக்குட்பட்ட பகுதியில் செய்படும் வணிக மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு வர்த்தக உரிமம் வழங்கிட அட்டவணை I,II மற்றும் III–ல் உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஜெயங்கொண்டம் நகராட்சியில் உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அட்டவணை–I**

(விதிகளைப் பார்க்கவும் 289(1)(2) மற்றும் (5)ன் படி உரிமக்கட்டணம் வருடத்திற்கு

(a) குறு நிறுவனங்கள்:

முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ). 1,500

அதிகபட்ச கட்டணம் (ரூ). 3,500

(b) சிறு நிறுவனங்கள்:

முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ). 3,500

அதிகபட்ச கட்டணம் (ரூ). 5000

(c) நடுத்தர நிறுவனங்கள்:

முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ). 7,500

அதிகபட்ச கட்டணம் (ரூ). 10,000

(d) பெரு நிறுவனங்கள்:

முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ). 10,000

அதிகபட்ச கட்டணம் (ரூ). 35,000

அல்லது மற்றவை

**வர்த்தகம் மற்றும் வணிகங்களின் பட்டியல்**

| வ. எண் | விபரம் |
|---|---|
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி |
| 3 | அனைத்து வகையான எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்களின் உற்பத்தி |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளின் உற்பத்தி |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 6 | கல் வெட்டுதல் மற்றும் நசுக்குதல் |
| 7 | காகிதப் பொருட்களின் உற்பத்தி |
| 8 | அனைத்து வகையான உலோகங்களின் உற்பத்தி |
| 9 | அனைத்து வகையான பாத்திரங்கள் மற்றும் பாத்திரங்களின் உற்பத்தி |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளின் உற்பத்தி |
| 11 | அனைத்து வகையான தொழில்துறை இயந்திரங்களின் உற்பத்தி |
| 12 | மோட்டார் வாகன பாகங்கள் உற்பத்தி |

| | |
|---|---|
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் உற்பத்தி செய்தல் |
| 14 | அனைத்து வகையான பொறியியல் வேலைகளும் |
| 15 | செங்கல் அறைகள் |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களின் உற்பத்தி |
| 17 | அனைத்து வகையான அழகுசாதனப் பொருட்களின் உற்பத்தி |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்து, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மூலிகைப் |
| 19 | அனைத்து வகையான ஃபேப்ரிகேஷன் வேலைகள் |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் |
| 21 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களின் உற்பத்தி |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களின் உற்பத்தி |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களின் உற்பத்தி |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களின் உற்பத்தி |
| 25 | கொதிகலன் உற்பத்தி |
| 26 | ஏர் கண்டிஷனர்கள் உற்பத்தி |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி தயாரிப்புகளின் உற்பத்தி |
| 28 | அனைத்து வகையான ஸ்டேஷனரி பொருட்களின் உற்பத்தி |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களின் உற்பத்தி |
| 30 | அனைத்து வகையான உள்நாட்டுப் பொருட்களின் உற்பத்தி |
| 31 | பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி |
| 32 | பேட்டரிகள் உற்பத்தி |
| 33 | மீன்பிடி வலைகள் உற்பத்தி |
| 34 | ஆபரணங்கள் உற்பத்தி |
| 35 | இசைக்கருவிகளின் உற்பத்தி |
| 36 | சுகாதார பொருட்கள் உற்பத்தி |
| 37 | சுண்ணாம்புசூளை |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்கள் உற்பத்தி |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகள் உற்பத்தி |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் உற்பத்தி செய்தல் |
| 41 | அனைத்து வகையான மரம் / ஒட்டு பலகை / சன்மிகா உற்பத்தி |
| 42 | அனைத்து வகையான ஹார்டுவேர்களின் உற்பத்தி |

| | |
|---|---|
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தி |
| 44 | அனைத்து வகையான விவசாயப் பொருட்களின் உற்பத்தி |
| 45 | அனைத்து வகையான சமயல் எண்ணெய்களின் உற்பத்தி |
| 46 | பால் பொருட்கள் உற்பத்தி |
| 47 | தேயிலை உற்பத்தி |
| 48 | காபி உற்பத்தி |

**அட்டவணை–II**

**உரிமக்கட்டணம் வருடத்திற்கு**

முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ). 700.00

அதிகபட்சம் கட்டணம் (ரூ). 10,000.00

| வ. எண் | விபரம் |
|---|---|
| 1 | பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 2 | தையல் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 4 | கையால் செய்யப்பட்ட அனைத்து வகையான பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 5 | அனைத்து வகையான எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சேவை மையங்கள் |
| 7 | அனைத்து வகையான காகித தயாரிப்புகளையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 8 | வேஸ்ட் பேப்பர் மார்ட்/பழைய ஸ்கிராப் பொருட்கள் |
| 9 | நூற்பு வேலைகள் |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 11 | ஏர் கண்டிஷனர்களின் சேவை |
| 12 | காற்று அமுக்கிகள்( Air Compressors) |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 14 | எடை இயந்திரங்கள் |
| 15 | பேட்டரி சார்ஜிங் கடைகள் |
| 16 | மோட்டார் வாகனக் காட்சி அறைகள் |
| 17 | ஹெல்மெட் கடைகள் |

| | |
|---|---|
| 18 | இரு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் சேவை மையம் |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் சேவை மையம் |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 21 | மோட்டார் வாகன பாகங்கள் சேமித்து விற்பனை செய்தல் |
| 22 | அனைத்து வகையான அழகுசாதனப் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 23 | அனைத்து வகையான தொழில்துறை இயந்திரங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களை சேழித்து விற்பனை செய்தல் |
| 25 | பூச்சிக்கொல்லிகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி தயாரிப்புகளையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 29 | அனைத்து வகையான ஹார்டுவேர்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 31 | அனைத்து வகையான ஸ்டேஷனரி பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 32 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 33 | அனைத்து வகையான ரப்பர் தயாரிப்புகளையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 34 | அனைத்து வகையான வீட்டு உபகரணங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 35 | ஆபரணங்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 37 | சுகாதாரப் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 38 | அனைத்து வகையான தென்னை நார்ப் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 39 | அனைத்து வகையான ஆடைகள்/ துணிகள் / ஜவுளிகளை சேமித்து விற்பனை செய்தல் |

| | |
|---|---|
| 40 | அனைத்து வகையான ரீட்ரெடிங் டயர்கள் டயர்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 41 | அனைத்து வகையான பாத்திரங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 42 | அனைத்து வகையான மரச்சாமான்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 43 | அனைத்து வகையான மரம்பஒட்டு பலகை/சன்மிகா ஆகியவற்றை சேமித்து விற்பனை செய்தல் |
| 44 | மர வடிவமைப்பு விற்பனை |
| 45 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களின் காடகை |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 47 | ஆப்டிகல்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 48 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருகளையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 49 | அனைத்து வகையான வாட்ச் மற்றும் உதிரி பாகங்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 50 | டெஸ்க்டாப் பப்ளிஷிங் உட்பட 50 அழைப்பிதழ்கள்/ வாழ்த்து அட்டைகள் விற்பனை/அச்சுஅச்சகம் |
| 51 | மருத்துவக் கடைகள் |
| 52 | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உள்வைப்புகளை சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல் |
| 53 | மூங்கில், தேங்காய் இலைகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 54 | எரியக்கூடிய பொருட்கள்,ஃபிலிம் செல்லுலாய்டு கட்டுரைகளை சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல் |
| 55 | புல் மற்றும் வைக்கோல் சேமிப்பு மற்றும் விற்பனை |
| 56 | மையப்படுத்தும் பொருட்களை பணியமர்த்துதல் |
| 57 | அனைத்து வகையான விவசாயப் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணம் |
| 60 | வாகன நிறுத்துமிடங்கள் |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் |
| 62 | பார்சல் சேவைகள்/கூரியர் சேவைகளின் முன்பதிவு |
| 63 | கேபிள் டிவி சேவைகள் |
| 64 | கேடயங்களை சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல் |
| 65 | உள்நாட்டு பட்டு வளர்ப்பு பொருட்கள் |

| | |
|---|---|
| 66 | பட்டாணி வறுவல் |
| 67 | ஃபேன்சி கடைகள் |
| 68 | பருத்தி படுக்கை / தலையணைகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 69 | சைக்கிள் பழுதுபார்க்கும் கடைகள் |
| 70 | பல்பொருள் அங்காடிகள் |
| 71 | ஜெராக்ஸ் கடை, டெஸ்க் டாப் பப்ளிஷிங் சென்டர்கள், இ–சேவா மற்றும் நெட் கஃபேக்கள் |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் |
| 74 | போட்டோ ஃப்ரேமிங் |
| 75 | தார்ப்பாய்களின் சேமிப்பு |
| 76 | பொற்கொல்லர்கள் |
| 77 | அனைத்து வகையான சுகாதார பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 78 | டைல்ஸ்/மார்பிள்ஸ்/கிரானைட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 79 | தீயணைப்பு கருவிகள் மற்றும் சாதனங்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 80 | முடி வெட்டும் சலூன்கள் |
| 81 | அழகு நிலையங்கள் / ஸ்பாக்கள் பகிர்வு அல்லது அறைகள் இல்லாமல் |
| 82 | தையல் கடைகள் |
| 83 | சலவைகள் |
| 84 | வினைல் போர்டுகடைகள் |
| 85 | கால் உடைகள் கடைகள் |
| 86 | மொபைல் கடைகள் (விற்பனை மற்றும் சேவை) |
| 87 | சைக்கிள் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை |
| 88 | புகைப்பட ஸ்டுடியோக்கள் |
| 89 | சினிமா ஸ்டுடியோக்கள் |
| 90 | ரெக்கார்டிங் தியேட்டர்கள் |
| 91 | அச்சு இயந்திரம் |
| 92 | அனைத்து வகையான அச்சுகளும் |
| 93 | ஜவுளி விற்பனை |
| 94 | நகைகள் விற்பனை |
| 95 | நெல் கொதித்தல் |

| | |
|---|---|
| 96 | சா மில்ஸ் |
| 97 | FCS  மில்ஸ் |
| 98 | அரிசி ஆலைகள் |
| 99 | பாக்கெட் இறைச்சியை சேமித்து விற்பனை செய்தல்' |
| 100 | கோழிகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 101 | ஆட்டிறைச்சி சேமித்து விற்பனை செய்தல் |
| 102 | சிக்கன் ஆட்டிறைச்சி சேமித்து விற்பனை செய்தல் |
| 103 | மாட்டிறைச்சி சேமித்து விற்பனை செய்தல் |
| 104 | கடல் உணவுகளை சேமித்து விற்பனை செய்தல் |
| 105 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் |
| 106 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 107 | அனைத்து வகையான சமையல் எண்ணெய்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 108 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 109 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 110 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 111 | மருத்துவ ஆய்வகங்கள் |
| 112 | அனைத்து வகையான பெட்டிக் கடைகள் |
| 113 | அனைத்து வகையான கால்நடை/பறவை தீவனங்களையும் சேமித்து விற்பனை செய்தல் |
| 114 | காபி வறுவல் மற்றும் அரைத்தல் |
| 115 | பால் பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 116 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 117 | அனைத்து வகையான பொருட்கள் மற்றும் மளிகை பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் |
| 118 | பேக்கரிகள் |
| 119 | ஜூஸ் ஸ்டால்கள் |
| 120 | AMF உடன் டீ ஸ்மால் |
| 121 | மீன்வளம் |
| 122 | ஈரமாவு அரைத்தல் |
| 123 | சுற்றுப்பயணங்கள் மற்றும் பயணங்கள் |

| | |
|---|---|
| 124 | பூமியை நகர்த்துபவர்கள் |
| 125 | கட்டுமானப் பொருட்களை பணியமர்த்துதல் |

## அட்டவணை–III

**(விதிகளைப் பார்க்கவும் 289 (1) (2)மற்றும் (7))**

(I) பொருந்தக்கூடிய தன்மை. இந்த அட்டவணை இவ்வாறு பயன்படுத்தப்படும் அனைத்து பொது கட்டிடங்களுக்கும் பொருந்தும்.

1) உண்ணும் வீடு, கேன்டீன் அல்லது உணவகம் தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் உட்காரும் இடம்

2) தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம். 1939 (தமிழ்நாடு சட்டம் 3. 1939) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி தங்கும் வீடுகள் தங்கும் விடுதி, சௌல்ட்ரி, மாளிகை, விருந்தினர் மாளிகை, சேவை அபார்ட்மெண்ட் வாராந்திர அடிப்படையில் தங்கும் இடம். மாதாந்திர அல்லது வருடாந்திர வாடகைகள்: மற்றும்

3) கல்யாண மண்டபம், விருந்து மண்டபம் அல்லது இது போன்ற பொதுக் கட்டிடங்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படும்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுதல் அல்லது விருந்துகளை நடத்துதல்.

(II) உரிமக் கட்டணம் (ஆண்டுக்கான விகிதம்)

(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் உட்காரும் பகுதியுடன் கூடிய உணவு விடுதி உணவுக்கூடம் உணவகம்:
முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம்(ரூ.)1000/
அதிகபட்ச கட்டணம் (ரூ.)15,000/–

(2) தமிழ்நாடு விடுதிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இல்லங்களின் கீழ் உரிமம் பெற்றவை தவிர மற்ற விடுதிகள்(ஒழுங்குமுறை) சட்டம், 2014 (தமிழ்நாடு சட்டம் 18 இன் 2014:)
முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ)1500/–
அதிகபட்ச கட்டணம் (ரூ)3,500/–

(3) தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939 (தமிழ்நாடு சட்டம் 3, 1939) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி தங்கும் வீடுகள் சௌல்ட்ரி, மேன்ஷன், கெஸ்ட் ஹவுஸ், சர்வீஸ் அபார்ட்மெண்ட், வாராந்திர, மாதாந்திர அடிப்படையில் தங்கும் இடம்ஆண்டு வாடகை.
முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம்(ரூ)3,000/–
அதிகபட்ச கட்டணம் (ரூ)30,000/–

(4) கல்யாண மண்டபம், விருந்து மண்டபம் அல்லது இதுபோன்ற பொதுக் கட்டிடங்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படும்சந்திப்பு அல்லது விழாவைக் கொண்டாடுதல் அல்லது விருந்துகளை நடத்துதல்.
முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ)3,000/–
அதிகபட்ச கட்டணம் (ரூ)30,000/–

## அட்டவணை–IV

[விதிகள் 282 (11) மற்றும் 286 (2) பார்க்கவும்]

(i) தனியார் பார்க்கிங் ஸ்டாண்ட் மற்றும் தங்குமிடம் (ஆண்டுக்கு விகிதம்)
முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம்(ரூ) 2,000/-
அதிகபட்ச கட்டணம் (ரூ)30,000/-

(ii) தனியார் ஸ்லாட்டர் ஹவுஸ்(Slaughter House) (ஆண்டுக்கு விகிதம்)
முனிசிபல் கவுன்சில்கள்குறைந்தபட்ச கட்டணம் (ரூ) 2,000/-
அதிகபட்ச கட்டணம் (ரூ) 20,000/-

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட கட்டணங்கள் வணிக நிறுவனங்களின் தன்மையைப்பொறுத்து நிர்ணயம் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண். 2123/2023/எச்1</u>

| | | | |
|---|---|---|---|
| **27.06.24** | **264** | பொருள் 43 ஜெயங்கொண்டம் நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடையில் மனித உடல்களை தகனம் செய்ய நடப்பு நிதியாண்டில் 2024 – 25 ஆம் ஆண்டிற்கு எரிவாயு (சிலிண்டர்) கொள்முதல் செய்யும் பணிக்கு செலவினத்தை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 1,50,000/- யினை பொது நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>**ந.க.எண். 4780 / 2021 / எச்1**</u> | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| **27.06.24** | **265** | பொருள் 44 ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2024 – 25 ஆம் ஆண்டுக்கான சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வரி வசூல் செய்து ஏதுவாக பொது மக்களுக்கு கேட்பு அறிவிப்பு சார்வு செய்ய அனைத்து இனங்களின் கேட்பு அறிப்புகளை கணினியில் பதிவிறக்கம் செய்து அதனை நகல் எடுக்கவும், கையேடுகளை நகல் எடுக்கும் பணிகளை மேற்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ. 3,00,000/- யினை பொது நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><u>**ந.க.எண். 0024/ 2024 / அ1**</u> | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| **27.06.24** | **266** | பொருள் 45 ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2022 –23 ஆம் ஆண்டிற்கான சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரிவசூல் பணி குறித்த ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண் 119 நாள் 29.08.2023 ஆம் தேதிய தீர்மானத்தின் அனுமதியின் படி 23.02.2024 அன்று விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று நிறுவனத்தின் விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **மன்றம் ஏற்கலாம்** |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td>ஆனந்த் ஆட்டோ சர்வீஸ், ஜெயங்கொண்டம்</td><td>கோபி ஆட்டோ சர்வீஸ், ஜெயங்கொண்டம்</td><td>வேல் ஆட்டோ சர்வீஸ், ஜெயங்கொண்டம்</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை ரூ. (நாள் ஒன்றுக்கு)</td><td>விலைப்புள்ளி தொகை ரூ. (நாள் ஒன்றுக்கு)</td><td>விலைப்புள்ளி தொகை ரூ. (நாள் ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>1</td><td>2700.00</td><td>2900.00</td><td>3000.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்த ஆனந்த் ஆட்டோ சர்வீஸ், ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 138/2018/அ1</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.24</td>
<td>267</td>
<td>பொருள் 46 இந்நகராட்சியின் 2023 – 24 ம் ஆண்டு திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2024–25 ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடு ருகூஐளு ளுடிகவறயசந மூலம் தயார் செய்து மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>ந.க.எண். 1065 / 2023 / பி1</u></td>
<td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
</tr>
<tr>
<td>27.06.24</td>
<td>268</td>
<td>பொருள் 47 ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 N.A.G காலனியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுக்கு புதியதாக மின் மோட்டார் அறை கட்டும் பணி மற்றும் அதற்கான மும்முனை ( Three Phase Line ) மின் இணைப்பு வழங்கிடவும் ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 2.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>ந.க.எண். 1833/2024/Ï1</u></td>
<td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
</tr>
<tr>
<td>27.06.24</td>
<td>269</td>
<td>பொருள் 48 ஜெயங்கொண்டம் நகராட்சியினை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 2023–2024 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் படி ஜெயங்கொண்டம் இரண்டாம் நிலை நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.57 நாள்.02.05.2023 ன் படி தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டது.<br>
அரசாணை (நிலை) எண்.10 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை நாள்.23.01.2023 ன்படி நகராட்சிகளின் நிலைக்கேட்ப புதிய பணியிடங்கள் தோற்றுவித்ததின் அடிப்படையில் பணியிடங்கள் அமர்த்தப்பட்டன.<br>
புதிய பணியிடங்கள் அமர்த்தப்பட்டதின் அடிப்படையில் பொதுப்பிரிவு – 2 , நகரமைப்பு பிரிவு – 1, பொதுசுகாதரப் பிரிவு – 1 , கணிணி அறை – 1 மற்றும் தணிக்கை அறைக்கு – 2 ஆக கூடுதல் – 7 எண்ணிக்கை ஏர் கூலர் (AC) வாங்கி</td>
<td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | பொருத்துவதற்கும் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் அறைக்கு தொலைக்காட்சி பெட்டி வைப்பதற்கும் மற்றும் இதர செலவினங்களுக்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 க்கும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அச்செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1832 / 2023 / சி1** | |
| **27.06.24** | **270** | பொருள் 49 ஜெயங்கொண்டம் நகராட்சியில் வரி வசூல் மையத்தில் தினசரி வசூலிக்கப்படும் தொகையினை பாதுகாப்பாக வைப்பதற்கு பாதுகாப்பு பெட்டக பெட்டி ஒன்று வாங்குவதற்கு மற்றும் வசூல் மையத்தில் பணம் என்னும் இயந்திரம் ஒன்று வாங்குவதற்கும் ஆகும் உத்தேச லெவினம் ரூ.50,000/- க்கும் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.110 நாள்.29.09.2022 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>மாவட்ட கூட்டுறவு சொசைட்டி கோவையில் பாதுகாப்பு பெட்டக பெட்டி ஒன்று வாங்குவதால் கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் மேலும்ரூ.75,000 (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) க்கும் அச்செலவினத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.3752/2022/சி1** | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| **27.06.24** | **271** | பொருள் 50 ஜெயங்கொண்டம் நகராட்சியில் பணியாற்றி வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை மற்றும் ரோப் அச்சிட்டு வழங்கும் பணிக்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.40000.00 யினை வழங்கவும், மேற்கண்ட செலவினத் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1832 /2024/சி1** | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| **27.06.24** | **272** | பொருள் 51 ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகத்தில் இயங்கிவரும் 125 KVA ஜெனரட்டருக்கு ஆயில் சர்வீஸ், டிஜிட்டல் பேரர்டு சர்வீஸ், ON/OFF Switch மற்றும் புதியதாக பேட்டரி வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதர பழுதுகள் நீக்கவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1812/ 2024 / இ1 | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| **27.06.24** | **273** | பொருள் 52 ஜெயங்கொண்டம் நகராட்சியில் தற்போது நிலவும் வறட்சியின் காரணமாக பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 70 ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வருகிறது. எனவே, ஆழ்துளை கிணறுகளில் தற்போதுள்ள நீர் மட்டத்திற்கு மின் மோட்டாரை இறக்குவதற்கும் மற்றும் ஏற்கனவே ஆழ்துளை கிணறுகளில் உள்ள பழைய குழாய்களில் ஏற்படும் அதிக | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| | | அழுத்தம் காரணமாக குழாய்கள் வெடித்து உடைந்து விடுவதாலும் அதற்கு தேவையான HDPE PN10 -75mm Pipe வாங்குவதற்கும் , மேலும், அதிக மின்னழுத்தம் காரணமாக அடிக்கடி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கியும், தற்போது மின் மோட்டார்கள் சுத்தமாக செயலிழந்து விட்டதாலும், வார்டு எண்.01 செங்குந்தபுரம் மற்றும் வார்டு எண். 06 சின்னவளையத்தில் புதியதாக இரண்டு மின் மோட்டார்கள் வாங்குவதற்கும் மற்றும் பானா தெருவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிற்கு புதியதாக ஒரு மின் மோட்டார் மற்றும் Starter மற்றும் HDPE–PN10 63mm Pipe போன்ற பொருட்கள் வாங்குவதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>ந.க.எண். 1886/ 2024 / இ1</u> | |
| **27.06.24** | **274** | பொருள் 53 ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகத்தில் பொதுப் பிரிவு, சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வரிவசூல் பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி மற்றும் பிரிண்டர்கள் போன்ற மின்னனு சாதனங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கணினிகளில் அதிக பயன்பாட்டின் காரணமாக Slow மற்றும் அதிகப்படியான Hang ஆவதாலும், அவ்வப்போது நடத்தப்படும் Google Meet மற்றும் Online Video Conference போன்ற கூட்டங்களில் பங்கேற்பதற்கு மிகவும் கடினமான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட பிரிவுகளில் உள்ள கணினிகளின் Processor, Hard Disk போன்ற Hardware மற்றும் Software–களை அவ்வப்போது புதுப்பிக்கவும், பராமரிப்பு செய்வதற்கும் மேலும் அனைத்து பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஒரு ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 1890/ 2024 / சி1</u>** | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |
| **27.06.24** | **275** | பொருள் 54 இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு 21 வார்டுகளிலும் பன்றிகள் சுற்றிவருதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது மற்றும் சுகாதார சீர்கேடும், பொது சுகாதாரத்திற்கு இடையூறாக சுற்றித்திரிவதாகவும் பொது மக்கள் அடிக்கடி மனுக்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, பன்றிகளை பிடித்து நகருக்கு அப்பால் காட்டு பகுதியில் அப்புறப்படுத்திட ஒரு பன்றிக்கு ரூ.100/– வீதம் 21 வார்டுகளிலும் சுற்றித்திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 4540 / 2022 / எச்1</u>** | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| **27.06.24** | **276** | பொருள் 55 ஜெயங்கொண்டம் நகராட்சி பிராதான சாலைகளில் சுற்றிதிரியும் மாடுகளால் பள்ளி செல்லும் மாணவ மாணவிகளுக்கு அச்சம் ஏற்படும் வண்ணம் உள்ளதால். நகராட்சி பகுதிகளில் பிரதாண சாலைகளில் பொது மக்களுக்கு இடையூறாக ஆதரவற்ற நிலையில் சுற்றி திரியும் மாடுகளை பிடித்து நகருக்கு அப்பால் அப்புறப்பபடுத்திட ஒரு மாடு ரூ.100/– வீதம் மாடுகளை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>ந.க.எண். 4540 – 1 / 2022 / எச்1</u> | **மன்றம் அனுமதி வழங்கலாம்** |

**ஆணையர்,**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**